சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – வடசென்னை பதிவு மாவட்டம் – திருமதி த.சுஜாதா என்பவர் கருணையடிப்படையில் 30.12.2016 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு(கே)த்துறை

அரசாணை (4ப) எண்.20

நாள் 30.09.2019
விகாரி, புரட்டாசி 13
திருவள்ளுவர் ஆண்டு, 2050
படிக்கப்பட்டது :

பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண். 49192/கே2/2015, நாள் 26.07.2019.

*****

ஆணை:

பதிவுத்துறையில் விழுப்புரம் பதிவு மாவட்டத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்தினிடையே 16.05.2015 அன்று மரணமடைந்த கோ.ரவிச்சந்திரன் என்பவரின் மனைவி திருமதி த.சுஜாதா என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 20.08.2015 அன்று மனு அளித்தார். அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி திருமதி த.சுஜாதா கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக வடசென்னை பதிவு மாவட்டத்தில் பணிநியமனம் வழங்கியுள்ளார். தனியர் 30.12.2016 பிற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அவரது தற்காலிகப் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எம்)துறை, நாள் 01.08.2018–ன்படி இந்நேர்வு குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், பதிவுத்துறைத் தலைவரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, திருமதி த.சுஜாதா என்பவர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான அதாவது இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் அனைத்து ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதி செய்யப்படுகிறது.

Scanned with CamScanner

4. மேற்காணும் பதிவுத்துறைத் தலைவரின் பரிந்துரையை ஏற்று, பதிவுத்துறையில் விழுப்புரம் பதிவு மாவட்டத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்தினிடையே 16.05.2015 அன்று மரணமடைந்த கோ.ரவிச்சந்திரன் என்பவரின் மனைவி திருமதி த.சுஜாதா என்பவருக்கு கருணையடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில், வடசென்னை பதிவு மாவட்டத்தில் அவர் பணியில் சேர்ந்த நாளான 30.12.2016 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்தப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற்றிட விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.16931/ட்டி1/2019–1, நாள் 17.09.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.31374/ஜி2/2019, நாள் 24.09.2019 ஆகியவற்றில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. பாலச்சந்திரன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
திருமதி த.சுஜாதா, இளநிலை உதவியாளர்,
வடசென்னை பதிவு மாவட்டம்.
(பதிவுத்துறைத் தலைவர் வழியாக)
பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28.(இ)
மாநிலக்கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(பதிவுத்துறைத் தலைவர் வழியாக)
நகல்:
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ட்டி1)துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner

மா.ப

வடசென்னை

/பதிவஞ்சலில் /ஒப்புகை அட்டையுடன்/

பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
சென்னை-600 028.

ந.க.எண்.49192/கே2/2015 நாள்.16.10.2019

11873
நாள் 22/10/19

அரசாணை (4அ) எண்.20, வணிகவரி மற்றும் பதிவு(கே)த்துறை நாள்.30.09.2019 சார்பு செய்யப்படுகிறது.

திருமதி.த.சுஜாதா, இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகளை மேற்கொள்ள வடசென்னை மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப வடசென்னை மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

ஓம்./-16.10.2019
பதிவுத்துறைத்தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

/ஆணையின்படி/

மாவட்டப்பதிவாளர்

பெறுநர்:
திருமதி.த.சுஜாதா, இளநிலை உதவியாளர்
(வடசென்னை மாவட்ட பதிவாளர் மூலம்)

நகல்:
மாவட்ட பதிவாளர், வடசென்னை.
(1.S.S.L.C. மதிப்பெண் சான்று ப.எண்.289836/எப்ரல் 1990.
2.சென்னை பல்கலைக்கழக B.A. பட்டப் படிப்பு சான்று நாள்.21.04.1997.
3.மாற்றுச் சான்று ( Transfer Certificate)
4.சாதிச் சான்று)
2.கே1 இருக்கையாளர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
3.முக்கிய ஆணைக் கோப்பு/ தனி நகல் -1

S.S.LC மற்றும் பட்டப்படிப்பு சான்று, மாற்றுச்சான்று, சாதி சான்று ஆகிய அசல் சான்றுகளும் மற்றும் ஆணையின் அசலையும் பெற்றுக் கொண்டேன்.

D. Sujatha
24/10/2019

Scanned with CamScanner